# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.89/2022
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| Name | ஜக்கம்மாள் | -- | |
|---|---|---|---|
| Husband's Name | சுப்பையா | Calling | தலைமை ஆசிரியர் |
| Village | ஆண்டியாபுரம் | Religion | |
| Taluk | சிவகாசி | Age | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Accused Present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் சிவகாசி தாலுகா, ஆண்டியாபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறேன். எனது கணவர் சுப்பையா பஞ்சாயத்து ஒப்பந்ததாரராக உள்ளார். எங்களுக்கு சிந்துஜா, சங்கீதா என்ற இரு மகள்கள் உள்ளனர். வழக்கில் இறந்து போன பொன்ராஜ் எனது அப்பா ஆவார். அவர் காவல்துறையில் ஏட்டுவாக பணிபுரிந்து ஓய்வு பெற்றார். 30.10.2021ம் தேதி நானும், எனது கணவரும் அவருக்குச் சொந்தமான இருசக்கர வாகனத்திலும், எனது அப்பா பொன்ராஜ் அவருக்குச் சொந்தமான TN67BZ9830 என்ற பதிவெண் உள்ள XL இருசக்கர வாகனத்திலும் நிறைமதி என்ற ஊரில் உள்ள எனது தங்கை முனியம்மாள் என்பவரை பார்ப்பதற்காக எனது தந்தை எங்களுக்கு முன்பாக சுமார் 10, 15 அடி தூரத்திலும் நானும்,எனது கணவரும் அவருக்குப் பின்னாலும் மதியம் 02.00 மணியளில் திருவில்லிபுத்தூரிலிருந்து சிவகாசி செல்லும் ரோட்டில் உள்ள ஈஞ்சார் விலக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது எனது அப்பா இண்டிகேட்டர் போட்டு திருப்பினார். அப்போது மேற்கிலிருந்து கிழக்காக ஒரு லோடு ஆட்டோ வேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து எனது அப்பா ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். எனது தந்தையை நான் பார்த்தபோது அவருக்கு தலையிலும், இடதுபக்க நெற்றியிலும் காயம் ஏற்பட்டது, அவர் பேசக்கூடியநிலையில் இல்லை. அந்த லோடு ஆட்டோவின் பதிவு எண். TN84L4885 ஆகும். அந்த சம்பவத்தின் போது மேற்படி லோடு ஆட்டோவை ஓட்டி வந்த நபரையும் நான் பார்த்தேன், அவரைப் பார்த்தால் நான் அடையாளம் காட்ட முடியும். ஆஜர் எதிரி தான் அவர். அவரது பெயர் மாரிமுத்து என்றும்

தெரிந்து கொண்டேன். காயம் பட்ட எனது அப்பாவை அதே லோடு ஆட்டோவில் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். அவர்கள் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததின் பேரில் மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். மதுரை அரசு மருத்துவமனையில் மருத்துவர் எனது அப்பாவை பார்த்துவிட்டு எனது அப்பா ஏற்கனவே இறந்துபோய் விட்டதாக தெரிவித்தார். சிவகாசி அரசு மருத்துவமனையில் எனது அப்பாவை சேர்த்தபோது அங்கு வந்த மல்லி போலிசாரிடம் நான் ஒரு புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

ஈஞ்சார் விலக்கு அருகே பேருந்து நிறுத்தமும், ஊருக்குச் செல்லும் வளைவும் உள்ளது. என் அப்பா தெற்கிலிருந்து வடக்காக சென்றார். நான் சென்ற வண்டியின் பதிவெண்ணை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. அந்த நேரத்தில் அங்கிருந்த பேருந்து நிறுத்ததில் ஆட்கள் இருந்தார்களா என்று கவனிக்கவில்லை. அங்கு ஒரு அரசு பேருந்து இருந்ததா என்று நான் பார்க்கவில்லை. நாங்கள் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சுமார் 03.00 மணிக்குச் சென்றோம். அந்தப் பகுதியில் எப்பொழுதும் போக்குவரத்து இருக்குமா என்று எனக்குத் தெரியாது. என் அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. என் அப்பா தலைக்கவசம் அணிந்திருந்தார். ஆட்டோ மேற்கிலிருந்து கிழக்காக வந்தது. என் அப்பா தெற்கிலிருந்து வடக்காக வந்தார். என் அப்பா வடக்காக சென்று சாலையைக் கடக்கும்போது தான் இந்த விபத்து ஏற்பட்டது. சம்பவமானது ஈஞ்சார் விலக்கில் நடு ரோட்டில் நடந்தது. என் அப்பா வண்டிற்கும், எங்களுக்கும் 15 அடி தூரம் இருந்தது. புகாரை நான் சொல்லச்சொல்ல போலிசார் எழுதினார்கள். அப்போது நேரம் மாலை 03.30 இருக்கும். அந்த நேரம் அங்கு எத்தனை வாகனங்கள் இருந்தது என்று நான் கவனிக்கவில்லை. போலிசார் 31ம் தேதி மதுரை வந்து என்னை விசாரித்தார்கள். விபத்து வாகனத்தை ஓட்டியவர் யார் என்று அதற்கு முன்னர் தெரியாது. எதிரி எப்படி கவனக்குறைவாக வந்தார் என்று என்னால் சொல்லமுடியாது ஆனால் வேகமாக வந்தார். இந்த விபத்து என் அப்பாவின் கவனக்குறைவால் தான் நடந்தது என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா வண்டியின் முன்பக்கமாக எதிரியின் வாகனம் மோதிவிட்டது. எதிரியின் வாகனம் மோதிய இடத்தில் அப்படியே நின்றது. இரண்டு வாகனங்களுக்கும் என்ன சேதாரம் என்று எனக்கு தெரியாது. எதிரியின் பெயரை போலிசார் சொல்லி தெரிந்து கொண்டேன். எதிரி மீது எந்த தவறும் இல்லை என்றும் அப்படியிருந்தால் வேறு ஆட்டோவில் சென்றிருப்போம் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று நான் பள்ளியில் இருந்தேன் என்றும், சம்பவ இடத்திலேயே நான் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்து போனவர் எனது அப்பா என்பதால் சம்பவத்தைப் பார்க்காமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN

Digitally signed by M VEERANAN
Date: 2026.01.19 11:42:19 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**